DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.09/2024**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 03-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 03 | தொழில் | - | ஆசிரியை |
| பெயர் | - | சங்கீதா | வட்டம் | - | பொள்ளாச்சி |
| க/பெ | - | சேகர் | சமயம் | - | |
| கிராமம் | - | அங்களக்ககுறிச்சி | வயது | - | 37/2026 |
| சாதி | - | | | | |

**<u>10-03-2026</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, அரசு உயர்நிலைப்பள்ளி அங்களக்குறிச்சியில் ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 பபிதா என்பவரை தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். கடந்த 20.03.2024-ம் தேதி அரசு உயர்நிலைப்பள்ளி வாட்டர்பால்ஸில் ஆசிரியையாக வேலை செய்து கொண்டிருந்த போது, நான் வகுப்பறையில் இருந்தேன். மதிய உணவு இடைவேளைக்கு பின்பு ஏதோ சத்தம் கேட்டதாகவும், பிரச்சனை நடந்ததாகவும் பள்ளியில் சொன்னார்கள். நான் அன்றைய தினம் ஆண்டு பொதுத்தேர்வுக்கான திருப்புதல் தேர்வு நடந்து கொண்டிருந்ததால் மாணவர்களுடன் நான் வகுப்பறையில் இருந்தேன். அ.சா.1 பபிதாவிற்கு பிரச்சனை என்று சொன்னார்கள். என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 20.03.2024-ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும், அ.சா.2 ஆசிரியை தேவியும், பள்ளி வகுப்பு முடித்துவிட்டு பாத்ரூமிற்கு செல்வதற்காக தலைமை ஆசிரியர் அறை அருகே வந்த போது, எங்கள் பள்ளியில் குழந்தைகளை வீட்டில் இருந்து அழைத்துக்கொண்டு பள்ளிக்கு அழைத்து வரும் எஸ்கார்டுகாக தற்காலிக வேலை செய்யும் பபிதா என்பவர் பதற்றத்துடன் அழுது கொண்டு தலைமை ஆசிரியர் அறையில் இருந்து வெளியில் வேகமாக வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவரிடம் நாங்கள் என்ன என்று விசாரித்த போது, தலைமை ஆசிரியர் குணசேகரன் எனது

கணவரும், அ.சா.1 பபிதாவும் பிரிந்து வாழ்வதை தெரிந்து கொண்டு கடந்த 2 மாதமாக தன்னிடம் தவறான நோக்குடன் அவர் தன்னுடன் குடும்ப நடந்த வா உன்னையும், உனது குழந்தைகளையும் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. பின்பு, 20.03.2024-ம் தேதி காலை 09.00 மணிக்கு பள்ளிக் குழந்தைகளை அழைத்து கொண்டு வந்தபோது, ஏன் லேட்டாக அழைத்து வந்தாய் என திட்டியதாகவும், 11.00 மணியளவில் தான் தலைமையாசிரியர் அறையில் இருந்த ஜெராக்ஸ் மிசினில் ஜெராக்ஸ் எடுத்துக்கொண்டிருந்த போது, தலைமையாசிரியர் தனக்கு பின்னால் வந்து அ.சா.1-டம் தவறாக நடக்க முயற்சி செய்தார் என்று சொன்னால் சரியல்ல. பபிதா தலைமையாசிரியரை தள்ளிவிட்டு ஓடி வந்ததாக கூறினார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் பபிதாவுக்கு ஆறுதல் கூறி அங்கிருந்த பெஞ்ச்சில் உட்கார வைத்தோம் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் பபிதா அவர்கள் அம்மா , மல்லிகாவிற்கு போன் செய்து தகவல் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. மல்லிகா பள்ளிக்கு வந்ததும் மேற்படி சம்பவம் குறித்து, புகார் கொடுப்பதற்காக காடம்பாறை காவல் நிலையம் சென்றதாக கூறினார் என்று சொன்னால் சரியல்ல. இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி தான் பணிபுரியும் பள்ளியில் தலைமையாசிரியர் என்பதால் அவருக்கு பயந்து அவருக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.9/2024**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.04 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 04 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | முருகன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பரமன் | சமயம் | - | |
| கிராமம் | - | வாட்டர்பால்ஸ் எஸ்டேட் | வயது | - | 63/2026 |
| சாதி | - | | | | |

**10-03-2026**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, கூலி வேலை செய்து உடல் நலக்குறைவால் வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 பபிதா எனது மருமகள் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவரது பெயர் குலசேகரன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. கடந்த 20.03.2024-ம் தேதி அன்று காலை சுமார் 11.00-11.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது போன் மூலம் எனது மருமகள் அ.சா.1 பபிதா வாட்டர்பால் ஸ்டேசனில் அழுது கொண்டிருப்பதாக சொன்னார்கள். நான் அங்கு சென்று எனது மருமகளிடம் என்ன விவரம் என்று விசாரித்த போது, ஆஜர் எதிரி குலசேரகன் எனது மருமகளை கையை பிடித்து இழுத்து கட்டிப்பிடிக்க வந்ததாகவும், எனது மருமகள் தள்ளிவிட்டு, காவல் நிலையத்திற்கு ஓடி வந்துவிட்டதாகவும் கூறினார். நான் உடனே வாட்டர்பால்ஸ் பள்ளிக்கு சென்று அங்கு குலசேகரன் அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரை பார்த்து வேலியே பயிரை மேய்ந்ததாக ஆகிவிட்டதே நீங்கள் பெரிய மனுசன் ஏன் இப்படி செய்தீர்கள் என்று கோபத்தில் கேட்டேன். அதற்கு அவர் தெரியாமல் கைபட்டுவிட்டுதாக கூறினார். நான் அதற்கு மேல் இருந்தால் பிரச்சனை ஆகிவிடும் என்று எண்ணி ஸ்டேசனிற்கு வந்துவிட்டேன். அதற்கு பின்பு குலசேகரனை போலீசார் கைது செய்தார்கள். போலீசார் மேப் வரைந்து கையொப்பம் கேட்டார்கள். அதற்காக காவல் நிலையத்தில் வைத்து நான் கையொப்பம் செய்தேன். **அந்த பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. போன் மூலம் யார் எனக்கு தகவல் சொன்னது என்று போன் மூலம் தகவல் வந்தது யார் என்று குறிப்பிட்டு தெரியவில்லை. நான் தகவல் தெரிந்தவுடன் நேராக காவல் நிலையம் சென்று விட்டேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்ற போது, அ.சா.1 பபிதா காவல் நிலையத்தில் இருந்தார் என்றால் ஆமாம் இருந்தார். நான் காவல் நிலையத்திலிருந்து பள்ளிக்கு சென்று ஆசிரியரை சந்தித்து கேட்ட விவரங்களை நான் போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை சொல்லவில்லை. போலீஸ் ஸ்டேசனில் இருந்து பள்ளிக்கு செல்லும் போது, என்னுடன் போலீசார் வந்தார்களா என்றால் இல்லை. நான் சென்ற பின்பு போலீசார் எப்போது காவல் நிலையம் சென்றார்கள் என்றால் நான் பள்ளியில் இருந்து வந்த பிறகு சுமார் அரை மணி நேரம் கழித்து அப்போது மணி மதியம் 12.00 யிருக்கும். குலசேகரனை அழைத்து வந்தார்கள். எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும், அ.சா.1 எனது மருமகள் என்பதற்காக நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.